Kr

# முதல் இடைப் பருவ பொதுத் தேர்வு - 2019

## பத்தாம் வகுப்பு

## சமூக அறிவியல்

பதிவு எண்: | | | | | |

நேரம்: 1.30 மணி

மதிப்பெண்கள்: 50

பிரிவு - I (மதிப்பெண்கள் : 14)

பகுதி - I

8×1=8

குறிப்பு : அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்:

1. "ஏகாதிபத்தியம் முதலாளித்துவத்தின் உச்ச கட்டம்" எனக் கூறியவர்
   அ) லெனின் ஆ) மார்க்ஸ் இ) சன்யாட்சென் ஈ) மாசேதுங்
2. *சரியான கூற்றைத் தேர்வு செய்க:*
   *கூற்று :* தற்காப்பு பொருளாதாரக் கொள்கையை முன்னிறுத்தியப் பொருளாதார தேசியம் என்னும் புதிய அலையால் உலக வணிகம் பாதிக்கப்படும்.
   *காரணம் :* அமெரிக்கா, கடன்பட்ட நாடுகளுக்குப் பொருளாதார உதவி செய்ய விருப்பமில்லாமல் இருந்ததனால் இந்நிலை உண்டானது
   அ) கூற்று, காரணம் இரண்டுமே சரி
   ஆ) கூற்று சரி, ஆனால் காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமல்ல
   இ) கூற்று, காரணம் ஆகிய இரண்டுமே தவறு ஈ) காரணம் சரி ஆனால் கூற்றுக்குப் பொருத்தமில்லை
3. பீகாரின் துயரம் என்று அழைக்கப்படும் ஆறு
   அ) நர்மதா ஆ) கோதாவரி இ) கோசி ஈ) தாமோதர்
4. கீழ்காணும் வரிசையில் முகவுரை பற்றிய சரியான தொடர் எது?
   அ) குடியரசு, ஜனநாயக, சமயச்சார்பற்ற, சமதர்ம இறையாண்மை
   ஆ) இறையாண்மை, சமதர்ம, சமயச்சார்பற்ற, குடியரசு ஜனநாயக
   ஈ) இறையாண்மை, சமதர்ம, சமயச்சார்பற்ற, ஜனநாயக குடியரசு
5. கீழ்கண்டவற்றுள் எது வர்த்தகக் கொள்கை
   அ) நீர்பாசன கொள்கை ஆ) இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கொள்கை
   இ) நிலச்சீர்திருத்தக் கொள்கை ஈ) கூலிக்கொள்கை

***கோடிட்ட இடங்களை சரியான விடை கொண்டு நிரப்புக:***

6. டானென்பர்க் போரில் ............ பேரிழப்பிற்கு உள்ளானது.
7. ............ இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் பாதுகாவலன் ஆகும்.
8. இந்தியாவில் மிகப்பெரிய துறை ........... துறையாகும்.

பகுதி - II

6×1=6

9. ***கீழ்க்கண்டவற்றைப் பொருத்துக:***

| | | | |
|---|---|---|---|
| 1. | ஜிங்கோயிசம் | - | அக்டோபர் - டிசம்பர் |
| 2. | செம்மொழி | - | வெர்செயில்ஸ் |
| 3. | சாங்போ | - | மாநில நிதி நெருக்கடி |
| 4. | வடகிழக்குப் பருவக்காற்று | - | ஜெர்மனி |
| 5. | கண்ணாடி மாளிகை | - | இங்கிலாந்து |
| 6. | 356 | - | பிரம்மபுத்திரா |
| | | - | தமிழ் |

பிரிவு - II (மதிப்பெண்கள் : 10)

குறிப்பு : i) ஏதேனும் ஐந்து வினாக்களுக்கு விடை தருக. ii) பகுதி - I ல் ஒரு வினாவும், பகுதி - II ல் ஒரு வினாவும், பகுதி - IIIல் 2 வினாவும் பகுதி - IV ல் ஒரு வினாவும் தேர்வு செய்க.

5×2=10

பகுதி - I

10. மூவர் கூட்டு நாடுகளின் பெயர்களைக் குறிப்பிடுக.
11. டாலர் ஏகாதிபத்தியம் - தெளிவுபட விளக்குக.

பகுதி - II

12. இந்தியாவின் செம்மொழிகள் எவை?
13. நிதிமசோதா என்றால் என்ன?

பகுதி - III

14. இந்தியாவின் அண்டை நாடுகளின் பெயர்களைக் கூறுக.
15. "வடகிழக்கு மாநிலங்கள்" ஏழு சகோதரிகள் என அழைக்கப்படுகின்றன - காரணம் கூறுக.
16. பருவ மழை வெடிப்பு என்றால் என்ன?
17. மலைப்பகுதிகள் சமவெளிகளை விட குளிரானவை. காரணம் கூறுக.

பகுதி - IV

18. நாட்டு வருமானம் வரையறு.
19. சிறுகுறிப்பு வரைக : i) GNH ii) HDI

பிரிவு - III (மதிப்பெண்கள் : 2)

**குறிப்பு : ஏதேனும் ஒன்றினை வேறுபடுத்திக் காட்டுக :** 1×2=2

20. இமயமலை ஆறுகள் மற்றும் தீபகற்ப ஆறுகள்
21. வடகிழக்குப் பருவக்காற்று மற்றும் தென்மேற்கு பருவக்காற்று

பிரிவு - IV (மதிப்பெண்கள் : 4)

**குறிப்பு : கீழ்க்கண்ட தலைப்புகளில் ஏதேனும் ஒன்றினை தேர்ந்தெடுத்து அவற்றின் அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க:** 1×4=4

22. *தென் அமெரிக்க அரசியல் நிகழ்வுப் போக்குகள்*
   அ) ஒட்டு மொத்த தென் அமெரிக்காவும் எந்த ஆண்டில் ஐரோப்பிய மேலாதிக்கத்திலிருந்து விடுதலை பெற்றது?
   ஆ) மத்திய அமெரிக்காவில் எத்தனைக் குடியரசுகள் உருவாயின?
   இ) எந்த ஆண்டில் கியூபா அமெரிக்காவால் கைப்பற்றப்பட்டது?
   ஈ) தென் அமெரிக்காவில் குழுக்களின் ஆட்சிகள் பலராலும் விரும்பப்படாமைக்குக் காரணம் என்ன?
23. *ஏகாதிபத்தியம் :*
   அ) முன்னுரிமை முதலாளித்துவம் குறித்து நீங்கள் அறிந்ததென்ன?
   ஆ) ஜப்பான் எவ்வாறு ஒரு ஏகாதிபத்திய சக்தியாக வடிவெடுத்தது?
   இ) பத்தொன்பதாம் நூற்றாண்டில் தொழிற் வளர்ச்சி பெற்ற நாடுகளுக்கு காலனிகள் ஏன் தேவைப்பட்டன?
   ஈ) முதலாளித்துவம் உருவாக்கிய முரண்பாடுகள் யாவை?

பிரிவு - V (மதிப்பெண்கள் : 10)

**குறிப்பு : ஒவ்வொரு வினா எண்ணிலும் உள்ள மூன்று வினாக்களில் ஒன்றினைத் தேர்வு செய்து இரண்டு வினாக்களுக்கு விடையளிக்கவும்** 2×5=10

24. அ) ஜெர்மனியுடன் தொடர்புடைய வெர்செய்ல்ஸ் உடன்படிக்கையின் சரத்துக்களை கோடிட்டுக் காட்டுக. **(அல்லது)**
   ஆ) ஜெர்மனியில் ஹிட்லரின் எழுச்சிக்கு இட்டுச்சென்ற சூழ்நிலைகளைக் கண்டறியவும். **(அல்லது)**
   இ) அடிப்படை உரிமைகளுக்கும், அரசு நெறிமுறையுறுத்தும் கோட்பாடுகளுக்கும் இடையேயான வேறுபாடுகளைக் குறிப்பிடுக. **(அல்லது)**
25. அ) கங்கை ஆற்று வடிநிலம் குறித்து விரிவாக எழுதுக. **(அல்லது)**
   ஆ) தென்மேற்கு பருவக்காற்று குறித்து எழுதுக. **(அல்லது)**
   இ) நாட்டு வருமானத்தை கணக்கிடுவதற்கு தொடர்புடைய பல்வேறு கருத்துக்களை விவரி.

பிரிவு - VI (மதிப்பெண்கள் : 3)

**குறிப்பு : கீழ்கண்டவற்றுக்கு காலக்கோடு வரைக:** 3×1=3

26. 1900 முதல் 1920 வரையிலான எவையேனும் மூன்று உலக வரலாற்று நிகழ்வுகளைக் காலக்கோட்டில் அமைத்திடுக.

பிரிவு - VII (மதிப்பெண்கள் : 7)

**குறிப்பு : வரைபட வினாக்கள்:**

27. *உலக வரைபடத்தில் கீழ்கண்டவற்றினை குறிக்கவும் :* 3×1=3
   அ) கிரேட் பிரிட்டன் ஆ) இத்தாலி இ) மொராக்கோ
28. *கொடுக்கப்பட்டுள்ள இந்திய வரைபடத்தில் ஏதேனும் நான்கு இடங்களை /பகுதிகளைக் குறிப்பிடுக :* 4×1=4
   அ) காரகோரம் ஆ) கங்கை இ) கஞ்சன் ஜங்கா ஈ) பன்னா உயிர்க்கோள பெட்டகம்
   உ) தென்மேற்கு பருவக்காற்று வீசும் திசை ஊ) அகஸ்திய மலை